# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் கார்த்திக் | Caste | : | |
| S/o. | : | ராமசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 30.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 06.03.2022 அன்று சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அதே துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது மாலை 2.20 மணிக்கு தேவூர் காவல்நிலைய குற்ற எண்.21/2022 வழக்கில் இறந்துபோன சுமார் 60 வயது

மதிக்கத்தக்க ஆனந்தன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை தலைமை காவலர் 294–திரு.மாதையன் என்பவர் மூலம் பெற்றேன். மேற்படி தலைமை காவலர் பிரேதத்தை அங்க மச்ச அடையாளம் காட்ட அன்றைய தினமே மதியம் 2.30 மணிக்கு பிரேத பரிசோதனை துவங்கினேன்.

பிரேதமானது சுமாரான ஊட்டத்துடன் கூடிய ஒரு ஆண் பிரேதமாகும். பிரேத விறைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதத்தின் மீது காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு ;

1. நெடுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 12 cm x 1 cm x எலும்பு ஆழம் வரை இடது பின்தலையிலிருந்து இடதுபுற கழுத்தின் பின்புறம் வரை காணப்பட்டது. அந்த காயமானது அடியில் உள்ள மண்டை ஓட்டை முழுவதுமாக வெட்டிய நிலையில் காணப்பட்டது.
2. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 5 cm x 1 cm x தசை ஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 2 செ.மீ கீழே காணப்பட்டது.
3. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 9 cm x 1 cm x தசை ஆழம் வரை இடதுபுற கழுத்தின் மேல்புறம் காணப்பட்டது.
4. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 11 cm x 1 cm x எலும்புஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 2 செ.மீ கீழே காணப்பட்டது. இந்தகாயமானது அடியில் உள்ள தசைகள், ரத்த நாளங்கள், நரம்புகள் மற்றும் மூச்சுக்குழாயை முழுவதுமாக

வெட்டியும் அதற்கு அடியில் உள்ள c3 கழுத்து தண்டுவட எலும்பு பகுதிவெட்டிய நிலையில் காணப்பட்டது.

5. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 25 cm x 1 cm x எலும்பு ஆழம் வரை இடதுபுற கழுத்தின் பின்புறத்திலிருந்து நெஞ்சுக்குழி வரையிலிருந்து வலதுபுற மேல் மார்பின் வரை காணப்பட்டது.
6. நெடுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 10 cm x 1 cm x தசை ஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 1 செ.மீ வெளியே காணப்பட்டது.
7. நெடுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 10 cm x 1 cm x தசை ஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 1 செ.மீ வெளியே காணப்பட்டது.
8. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 5 cm x 1 cm x எலும்பு ஆழம் வரை இடது தோள்பட்டையின் முன்புறம் காணப்பட்டது. அந்த காயமானது அடியில் உள்ள எலும்பை பகுதி வெட்டிய நிலையில் காணப்பட்டது.
9. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 7 cm x 1 cm x எலும்பு ஆழம் வரை இடதுபுற மேல் மார்பில் காணப்பட்டது. அந்த காயமானது அடியில் உள்ள எலும்பை பகுதி வெட்டிய நிலையில் காணப்பட்டது.
10. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 12 cm x 1 cm x எலும்பு ஆழம் வரை வலதுபுற கன்னத்திலிருந்து வலதுபுற கழுத்தின் பின்புறம் வரை காணப்பட்டது. அந்த காயமானது அடியில் உள்ள எலும்பை பகுதி வெட்டிய நிலையில் காணப்பட்டது.

11. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 4 cm x 1 cm x தசை ஆழம் வரை வலது முன்கையின் பின்புறம் காணப்பட்டது.
12. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 4 cm x 0.5 cm x 0.5 ஆழம் வரை வலது கன்னத்தில் காணப்பட்டது.
13. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 6 cm x 0.5 cm x 0.5 ஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 2 செ.மீ கீழே காணப்பட்டது.
14. குறுக்குவாக்கில் சாய்வான வெட்டுக்காயம் 10 cm x 0.5 cm x 0.5 ஆழம் வரை முந்தைய காயத்திலிருந்து 1 செ.மீ கீழே காணப்பட்டது.

<u>உட்புற கூராய்வு</u>

தலை மற்றும் கழுத்துப்பகுதி கூராய்வை வெளிப்புற காயங்கள் விவரித்துள்ளேன். மார்பறையை கூராய்வு செய்து பார்த்தபோது இதயம் இயல்பான அளவிலும் அறைகள் காலியாகவும் காணப்பட்டது. வால்வுகள் பெரிய தமனிகள், இதய தமனிகள், இயல்பான நிலையில் காணப்படடது. நுரையீரல்கள் இயல்பான அளவிலும், வெட்டுத்தோற்றத்தில் வெளிறியும் காணப்பட்டது. வயிற்றை கூராய்வு செய்து பார்த்தபோது இரைப்பையில் 200 கிராம் அளவில் பகுதி செரிமாணம் ஆன உணவுப்பொருட்கள் எந்த குறிப்பிட்ட நெடியும் இன்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் வெட்டுத்தோற்றத்தில் வெளிறியும் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. இடுப்பு எலும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. பிரேதத்தின் மீது பல்வேறு பகுதிகளில் மேற்பரப்பில் அறுத்து பார்த்தபோது அடியில் எந்த கன்றிய

காயங்களும் காணப்படவில்லை. உடல் உள் உறுப்புகளை சேகரம் செய்து ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்புவதற்காகவும், ரத்தம் தோய்ந்த துணியை ரத்த வகை கண்டறிய வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க காவலரிடம் ஒப்படைத்தேன். இறப்பின் நேரம் குறித்து இறந்தவர் என்னுடைய உடல் கூராய்விற்கு முன்பாக 12 லிருந்து 24 மணி நேரத்திற்கள் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன்.

ரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டது. அதில் நச்சுத்தன்மையோ ஆல்கஹாலோ கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கை அடிப்படையிலும் ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அடிப்படையிலும் இறந்தவர் தனக்கு தலை மற்றும் முகத்தில் ஏற்பட்ட பலதரப்பட்ட வெட்டுக்காயங்களால் ஏற்பட்ட ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து இறுதி கருத்துரை வழங்கி உள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1–அரிவாளால் மேற்சொன்ன இறந்த நபரை தாக்கும்போது நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7, எனது இறுதி கருத்துரை அ.சா.ஆ.8 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. காவல் ஆய்வாளர்

என்னை விசாரணை செய்யும்போது ஆயுதங்களை காண்பித்து விசாரணை செய்தாரா என்றால் இல்லை. மேற்சொன்ன காயங்கள் இருமுனை கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட்டதா அல்லது ஒரு முனை கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட்டதா என்றால் மேற்சொன்ன காயங்கள் அனைத்தும் வெட்டுக்காயங்கள், குத்துக்காயங்களைத்தான் ஒரு முறை கூர்மையான ஆயுத்தத்தால் ஏற்பட்டதா அல்லது இருமுனை கூர்மையான ஆயுத்தத்தால் ஏற்பட்டதா என்று சொல்ல முடியும்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.